எனது இல: எம்/01/42

சுற்றறிக்கை இல: பதி.நா / 10/2006

திகதி: 2006.09.01

அனைத்து மாவட்ட செயலாளர்கள் /
மேலதிக பதிவாளர் நாயகங்களுக்கு,

**விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்களின்**
**ஓய்வுபெறும் வயது எல்லை**

எனது இலக்கம் எம்/01/42 மற்றும் 2006.08.30 திகதியிடப்பட்ட பதி.நா / 08/2006 எனும் சுற்றறிக்கை தொடர்பானது.

2. மேற்கூறிய சுற்றறிக்கையுடன் அனுப்பிவைக்கப்பட்ட விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்களைத் தழுவிக்கொள்ளும் திருத்தப்பட்ட நடைமுறைக்கோவையின்படி (ஆண்டு 2006), ஓய்வுபெறுவதற்கான அதிகபட்ச வயது எல்லை 70 ஆண்டுகள் என்பது, 2006.08.30 ஆம் திகதிக்கு பின்னர் நியமிக்கப்பட்ட அனைத்து விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்களுக்கு மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும்.

3. தற்போது நியமனம் பெற்றுள்ள நிரந்தரப் பதிவாளர்களுக்கான அதிகபட்ச ஓய்வுபெறும் வயது எல்லை 75 ஆண்டுகள் என்பதில் மாற்றமில்லை. அதற்கமைய மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்கவும்.

(ஒப்பம்)
எல்.கே. ரத்நாயக்க
பதிவாளர் நாயகம்

பிரதிகள்:

1. அனைத்து வலய உதவிப் பதிவாளர் நாயகங்கள் - தகவலுக்காக
2. அனைத்து பிரதேச செயலாளர்கள் - தகவலுக்காக
3. அனைத்து காணிப் பதிவாளர்கள் - தகவலுக்காக
4. செயலாளர், நாடளாவிய ரீதியிலான விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்கள் சங்கம் -
-தகவலுக்காக